**கமநல அபிவிருத்தி நிதியம் - 2013**

கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செலாற்றல் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 97(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி

நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் காசு மீதியை திறைசேரி ஏடுகளுடன் இணக்கம் செய்கையில் ரூபா 651,797 தொகையான வேறுபாடு 6 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டதுடன் இந்த வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட உழவு இயந்திர இழுவைக் கடன் கணக்கின் மீதிக்கும் நிறுவன அபிவிருத்திப் பிரிவிலிருந்து வழங்கப்பட்ட பட்டோலைகளின் மீதிகளுக்கிடையே ரூபா 53,491 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ''ஜப்பான் யென் உதவி நிகழ்ச்சித்திட்டம்'' இன் கீழ் விவசாயக் குழுக்கள் மற்றும் விவசாயச் சங்கங்களுக்கு அமைச்சு பகிர்ந்தளித்த விவசாய உபகரணங்களுக்காக தவணைப் பணம் அறவிடப்பட்டு கமநல அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது தவணைப் பணமாக ரூபா 70,761,153 தொகை சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் அனுப்பிவைக்கப்பட்ட பணம் ரூபா 68,221,464 ஆகும்.

(ஆ) தெளிக்கும் இயந்திர வைப்புக்கள் மற்றும் புள்டோசர் சேவை வைப்புக்கள் கணக்குகளில் ரூபா 10,746,805 தொகையான மீதி 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாது நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பெறவேண்டிய கணக்குகளில் ரூபா 6,859,216 தொகையான செயற்பாடற்ற கடன் மீதி அவதானிக்கப்பட்டதுடன் 07 வருடங்களாகக் காணப்பட்டு வரும் இந்த மீதியை அறவிடுவதற்காக தொடரான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி. 104 | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் இனங்காணப்பட்ட இருப்புப் பற்றாக்குறை ரூபா 450,000 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பொறுப்பானவர்களைத் தீர்மானித்து அறவிடுவதற்கு |

நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் இருப்புப் பற்றாக்குறையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ii) | நி.பி. 371(2)(ஆ) | ஒரு சந்தர்ப்பத்தின் போது வழங்கக்கூடிய செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 இற்கு மேற்பட முடியாதிருந்த போதிலும், அந்த எல்லையினை விஞ்சி 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,181,076 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | நி.பி. 371(2)(இ) | 05 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 808,231 கூட்டுத்தொகையான முற்பணத்திலிருந்து உரிய முழுமையான செயற்பாட்டை நிறைவேற்றாத மற்றும் 25 சதவீதம் அளவிலான செயற்பாட்டை நிறைவேற்றிய ரூபா 717,685 கூட்டுத்தொகையானது மீளாய்வாண்டின் இறுதியின் போது தீர்க்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (அ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய 423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் 4(1)(இ) பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடின்றி உரிய ஆண்டின் போது செலவினங்களைச் செய்ய முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக அங்கீகரிக்கப்படாத 13 செயற்பாடுகளுக்காக ரூபா 4,676,187 தொகையான செலவினம் செய்யப்பட்டமை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 12,827,826 மிகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 4,492,719 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 8,335,107 ஆன அதிகரிப்பைக் காட்டியது. ஏக்கர் வரி வருமானம் ரூபா 7,455,026 ஆல் அதிகரித்தமை நிதிவிளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

யப்பான் யென் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைச்சினால் ஒவ்வொரு ஆண்டிலும் பகிர்ந்தளிக்கப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் தண்ணீர் பம்பிகளுக்காக தவணைப்பணம் அறவிடுதல் நிதியத்தின் பொறுப்பாக இருந்த போதிலும் அறவிடும் செயல்முன்னேற்றம் மிகவும் மந்த நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் நிலுவைத் தவணைப்பணம் ரூபா 521,789,207 ஆக இருந்தது.

## 4.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2010/2011 ஆம் ஆண்டுகளில் ரூபா 8,227,329 தொகை செலவில் ஜலதாரா கைநூல், ஜலதாரா அல்பம், கிராமத்தின் நீர்ப்பாசன கைநூல் என்பன அச்சிடப்பட்டிருந்த போதிலும், அந்த புத்தகங்கள் உரிய தரப்பினருக்கு பகிர்ந்தளித்தல் மிகவும் மெதுவாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அச்சிடப்பட்ட 41,300 புத்தகங்களில் மீளாய்வாண்டின் இறுதியளவில் 37,039 புத்தகங்கள் எஞ்சியிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 06 அபிவிருத்திச் செயற்பாடுகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,100,000 தொகையான நிதி ஏற்பாடு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புப் பதிவேட்டைப் பேணுதல்
(ஆ) வைப்புக் கணக்குகள் தீர்க்கப்படல்
(இ) கடன் அறவீடு
(ஈ) சொத்துப் பயன்பாடு
(உ) முற்பண வழங்கல்